**இந்திய அரசு**
இந்திய வானிலை ஆய்வு துறை
மண்டல வானிலை ஆய்வு மையம்
6,கல்லூரி சாலை, சென்னை - 600006
தொலைபேசி : 044- 28271951.

**GOVERNMENT OF INDIA**
INDIA METEOROLOGICAL DEPARTMENT
Regional Meteorological Centre
No. 6, College Road, Chennai–600006
Phone: 044- 28271951.

| DATE: 16-04-2021 | Time of Issue:1230 Hrs |
|---|---|

# 2021 ஆண்டிற்கான தென்மேற்கு பருவ மழை பற்றிய சுருக்கம்

இந்த ஆண்டிற்கான தென்மேற்கு பருவமழை ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டங்களில் நாட்டின் மொத்த மழை அளவு பெரும்பாலும் சராசரியை அதாவது 96 முதல் 104 விழுக்காடு வரை இருக்கும் (நீண்டகால சராசரி மழை அளவை பொறுத்து).

மழை அளவைப் பொறுத்தவரை, சராசரியிலிருந்து 98 விழுக்காடு வரை கிடைக்க வாய்ப்பு உள்ளது. இதில் 5 விழுக்காடு அளவிற்கு (Model Error) ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடும். நாட்டின் தென்மேற்கு பருவமழையின் சராசரி அளவு 88 சென்டிமீட்டர் (1961முதல் 2010 வரை பதிவான மழையின் சராசரி ).

தற்போது பசிபிக் பெருங்கடலின் (கிழக்கு மற்றும் மேற்கு பகுதி) கடல்மட்ட வெப்பநிலை மற்றும் காற்றழுத்த வேறுபாடு சமநிலையில் உள்ளது (ENSO-Neutral). மேலும் இந்தியப் பெருங்கடலின் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் கடல் வெப்பநிலை சமநிலையில் உள்ளது. ஆனால் வரும் பருவகாலத்தில் ENSO தொடர்ந்து சமநிலையில் இருக்கும் என்றும் IOD ஆனது நேர் எதிர் நிலையில் மாறக்கூடும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. இது பருவமழைக்கு சாதகமின்மையாக அமையும்.

மேலும் பசிபிக் பெருங்கடல் மற்றும் இந்தியப் பெருங்கடலின் கடல் மட்டத்தில் ஏற்படும் வெப்பநிலை ஏற்றத்தாழ்விற்கும் இந்தியாவின் தென்மேற்கு பருவமழைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதால் இந்திய வானிலை மையம் இதனை தொடர்ந்து கண்காணித்து, புதுப்பிக்கப்பட்ட இரண்டாம் கட்ட பருவ மழைக்கான வானிலை மாதிரியை வரும் மே மாதம் இறுதி வாரத்தில் வெளியிடும்.

இந்திய வானிலை ஆய்வு மையம்